ඩිජිටල් ආර්ථික අමාත්‍යාංශය
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
MINISTRY OF DIGITAL ECONOMY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. } DRP/OP/21/15/01

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2026.04.09

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

**ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின்**
**சுற்றறிக்கை : 01/2026**

சகல பிரதேச செயலாளர்களுக்கும்

**<u>பிறப்புச் சான்றிதழ் இல்லாத இலங்கைப் பிரஜைகளுக்கு தேசிய அடையாள அட்டை விநியோகித்தல்.</u>**

பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை தேசிய அடையாள அட்டை பெற்றுக்கொள்ள முடியாத, 50 வயதுக்கு மேற்பட்ட தங்கள் பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் நபர்களுக்கு இந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொண்டு, தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தயவாய் தெரிவித்துக் கொள்கிறேன்.

02. அதன்படி, எந்தவொரு கிராம அலுவலர் பிரிவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட, வாக்காளர் பதிவேட்டில் பதிவு செய்து, பிறப்புச் சான்றிதழ் இல்லாத காரணத்தினால் இதுவரை தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியாத 50 வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் இதற்கு விண்ணப்பிக்க வேண்டும். இதற்காக, கீழே கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின்படி உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

I. ஆ.ப.தி.1,7,8 விண்ணப்பப்படிவம்
II. ஆ.ப.தி/இ/03/01 பிரகடனம்
III. பெயர், முகவரி, பிறந்த திகதி, பிறந்த இடம், கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலக பிரிவு மற்றும் விண்ணப்பதாரி இலங்கை பிரஜை என குறிப்பிடும் சத்தியக் கடதாசி
IV. ஆ.ப.தி/இ/02/03 பிரகடனம் (குறித்த தண்டப்பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன்)
V. பிறப்பு பதிவு செய்யப்படவில்லை என்பதற்காக மேலதிக மாவட்டப் பதிவாளரினால் வழங்கப்படும் தேடுதல் விளைவுப் பத்திரத்துடன் பெயர் மற்றும் பிறந்த திகதியை உறுதிபடுத்தக்கூடிய பின்வரும் ஆவணங்களில் **ஒரு ஆவணம்** எழுத்துமூல சாட்சியமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.
    a. பிள்ளைகள் இருந்தால் அவர்களின் பிறப்புச்சான்றிதழ்
    b. பாடசாலை விடுகைப் பத்திரம்
    c. முதியோர் அடையாள அட்டை
    d. தோட்ட பிறப்புச் சான்றிதழ் மற்றும் தோட்ட விடுகைப்பத்திரம்
    e. வட கிழக்கு பிரதேசங்களில் வசிக்கும் ஆட்களை அடையாளப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்டுள்ள விசேட / தற்காலிக அடையாள அட்டை
    f. அக்குடும்பத்திற்காக (மேலே eல் குறிப்பிடப்பட்டுள்ள) விநியோகிக்கப்பட்டுள்ள குடும்ப விபரம் குறிப்பிடப்பட்ட குடும்ப அட்டை
    g. செல்லுபடியாகும் கடவுச்சீட்டுகள்
    h. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்
    i. விவாகச் சான்றிதழ்
    j. அடையாளப்படுத்துவதற்காக விநியோகிக்கப்பட்டுள்ள நம்பகமான நிறுவனங்களின் அடையாள அட்டை
    k. பிறந்த வேளையில் சம்பிரதாயமாக தயார் செய்யும் ஜாதகக்குறிப்பு / கேந்திரம் / ஜனனக்குறிப்பு போன்றவற்றை பிரதேச செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் மூலம் சான்றுப்படுத்தப்பட்ட பிரதி

දුරකථන / தொலைபேசி / Telephone } (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail } info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web } www.drp.gov.lk

03. பெயர் மற்றும் பிறந்த திகதியை உறுதிப்படுத்த மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாவிட்டால், விண்ணப்பதாரரின் பெயர், பிறந்த திகதி, பிறந்த இடம் மற்றும் முகவரி ஆகியவற்றைக் கொண்ட கிராம அலுவலரால் தயாரிக்கப்பட்ட அறிக்கை, பிரதேச செயலாளரால் மேலொப்பமிடப்பட்டு, சம்பந்தப்பட்ட நபரின் அறிக்கையுடன் சமர்ப்பிக்க முடியும்.

04. மேலும், ஆ.ப.தி/இ/03/01 பிரகடனத்தின் 05ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையை வைத்திருக்கும் விண்ணப்பதாரரின் நெருங்கிய உறவினரின் விபரங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை வைத்திருக்கும் மூன்று நபர்களின் சான்றொப்பம் அவசியமாகும்.

05. ஒரு குறிப்பிட்ட நபர் தனது பிறந்த இடத்திற்குச் சென்று தேடுதல் விளைவுப் பத்திரத்தை பெறுவதில் சிரமம் ஏற்பட்டால், அந்த ஆவணத்தை பெறுவதற்கு அவர் தற்போது வசிக்கும் இடத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளரிடம் இருந்து தனது பிறந்த இடத்தின் மேலதிக மாவட்டப் பதிவாளருக்கு, தேவையான ஆவணங்களுடன் உரிய கோரிக்கையைச் சமர்ப்பித்து, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தேடுதல் விளைவுப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

06. மேலும், பிறப்புச் சான்றிதழ் இல்லாத மற்றும் 50 வயதுக்கு மிகாத பிரஜைகளுக்கு, உத்தேச வயதுச் சான்றிதழ் அல்லது மகவேற்பு சான்றிதழுடன் (Adoption Certificate), பிறந்த திகதியை உறுதிப்படுத்தக்கக்கூடிய பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை சமர்ப்பிப்பதன் மூலம் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியும். இருப்பினும் உத்தேச வயதுச் சான்றிதழில் பிறந்த திகதி குறிப்பிடப்படவில்லை என்றால், பின்வரும் ஆவணங்களில் ஒன்றுடன் பெயர், பிறந்த திகதி மற்றும் பிறந்த இடம் ஆகியவற்றைக் குறிக்கும் முறையான சத்தியக்கடதாசியினை சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

a. பிள்ளையொன்றினுடைய பிறப்புச் சான்றிதழ்
b. பாடசாலை விடுகைப் பத்திரம்
c. சுகாதார வளர்ச்சிப் பதிவேடு
d. தோட்ட பிறப்புச் சான்றிதழ்

07. இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவர், பிறப்புச் சான்றிதழ் வைத்திருப்பவர் அல்லது ஏற்கனவே தேசிய அடையாள அட்டையைப் பெற்ற ஒருவர், இதன் மூலம் வழங்கப்படும் சலுகையை பயன்படுத்தி மீண்டும் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காமல் இருப்பதை உறுதிசெய்து, சில மோசடி நபர்கள் தமது அடையாளத்தைப் பற்றிய தகவல்களை மறைத்து புதிய அடையாளத்தைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளைத் தடுப்பதற்கு, உங்கள் கவனத்திற்கு முன்வைப்பதோடு, இது தொடர்பாக சகல கிராம அலுவலர்களும் விசேட கவனத்தை செலுத்துமாறும் மேலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**எம்.எஸ்.பீ.சூரியப்பெரும**
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம் (ப.க)

பிரதிகள் :

| | | |
|---|---|---|
| 01. | *செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு* | - தெ.கொ. |
| 02. | சகல மாவட்ட செயலாளர்கள் | - தெ.கொ |
| 03. | பதிவாளர் நாயகம் | - தெ.கொ மற்றும் உ.ந |
| 04. | கணக்காய்வாளர் நாயகம் | - தெ.கொ |
| 05. | சகல பதவிநிலை உத்தியோகத்தர்கள் (ஆ.ப.தி) | - தெ.கொ மற்றும் அலுவலக பணிகுழாமிற்கு தெரியப்படுத்துவதற்கு |
| 06. | பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆ.ப.தி.அபிவிருத்தி உத்தியோத்தர்கள் | - தெ.கொ மற்றும் உ.ந |